**THE HINDU 28.11.2024**

# Rajasthan Forest Minister visits stall of IFGTB

Sanjay Sharma, Minister of Forest, Environment and Climate Change, Science and Technology Department, Government of Rajasthan, visited the Green Skill Development Programme product stall of the Institute of Forest Genetics and Tree Breeding (IFGTB) on Wednesday.

**DINAMALAR 28.11.2024**

# ராஜஸ்தான் வனத்துறை அமைச்சர் மரப்பெருக்கு நிறுவனத்துக்கு விசிட்

**கோவை, நவ. 28–**

ராஜஸ்தான் வனத்துறை அமைச்சர் கோவையிலுள்ள மரப்பெருக்கு நிறுவனத்துக்கு விசிட் செய்து அங்கு நடைபெறும் பசுமைத்திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றவர்கள் உருவாக்கிய பொருட்களை பார்வையிட்டார்.

கோவையிலுள்ள வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் செயல்படும் சுற்றுச்சூழல் தகவல் மையத்தில், பசுமைத்திறன் மேம்பாட்டுத்திட்ட பயிற்சி பெற்றவர்களின் கைவினைப்பொருட்கள் கண்காட்சி நேற்று நடந்தது. இக்கண்காட்சியை ராஜஸ்தான் அரசின் வனம், சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஶ்ரீ சஞ்சை சர்மா பார்வையிட்டார்.

அதன் பின் அவர் கூறியதாவது: சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும், கோவையிலுள்ள வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் வழங்கும் பயிற்சி பெற்றவர்களுக்கும், 18 வயதை கடந்த அனைவருக்கும் நிலையான வாழ்வாதாரத்துக்கான வாய்ப்புகளை இந்த கைவினைப்பொருள் தயாரிப்புக்கான பயிற்சி உருவாக்கும். இத்திட்டத்தின் பங்களிப்பை பயன்படுத்திக்கொள்ளுங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

அவருடன் மூத்த திட்ட அலுவலர் விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்நாடு மற்றும் ராஜஸ்தான் வனத்துறையின் மூத்த அதிகாரிகள் கண்காட்சியை பார்வையிட்டு பயிற்சியாளர்களின் படைப்பாற்றலை பாராட்டினர்.